T. 865.

உ

சிவமயம்.

ஓம் மகா கணபதி துணை

# ஸ்ரீ பாரிஜாதவனேசுவரர்

# பதிற்றுப் பத்தந்தாதி

இது

ஸ்ரீ சமிவன க்ஷேத்திரமென்னும் ஸ்ரீகாவிலூர்

மடாலயம்

ஸ்ரீமத் வீரசேகர ஞானதேசிகர்

பாதசேகரரான

ஸ்ரீ சுப்பையஸ்வாமிகளால்

ஸ்ரீபாரிஜாதவன மென்னுந் திருக்களரிலெழுந்
தருளியிருக்கும் ஸ்ரீ பாரிஜாதவனேசுவரர் பேரில்

திருக்களர் கோயில் பஞ்சாயத்தாரும்,
இருக்கு வேதபாடசாலை யதிபருமாகிய

காரைக்குடி

மகா-ள-ள-ஸ்ரீ ப. ழ. வெ. ரா. ம. இராமநாதஞ்
செட்டியாரவர்கள்

வேண்டுகோளின்படி இயற்றப்பெற்று
மேற்படியாரால்

மன்னார்குடி

பாரதி அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.

1911.

ORIENTAL MANUSCR
MADRAS

உ

சிவமயம்

ஓம் மஹா கணபதயே நம:

# ஸ்ரீபாரிஜாத வனேசுவரர் பதிற்றுப் பத்தந்தாதி.

## மங்கலம்.

சீராருந் திருக்களர்வாழ் சிவபெருமான் றிருவடியைத் தினமும் போற்ற
வேராருமத் தாதிதனைப் புரியவருள் புரிவா னிமையோ ரோடும்
பாராரு முனிவராரும் பணிந்தேத்தும் வலம்புரியெம் பரம தேவ
னொராருந் திருவடியை நிதந்தொழுதுகனி புகழ்ந்து நினைகுவாமே.

திருமகளுங் கலைமகளு மலைமகளு ந்தினம்பணியு ந்தேவியோடுன்
கரிமுகனன் முருகனெனு ங்கருணைசொரி குமரரோடுங் கலந்துமேவித்
தருவனமிங் கதனிலுறை பெருமானே முத்தாபந் தணந்து வாழ்வா
னிருவினை யிற்றனையுறுமிந் நாயடியே னினை வழுத்தவியைந் திட்டேனே.

இட்டாயிங் கெனைப்பிறவி தனிலெனினு நாவடிவா யினிது லாவ
நட்டேது மில்லெனினு முட்டாளாய் நாரியர் தம் நசையிற் போந்தே
கெட்டேனெ னெந்தாயே யாயினு நின்றனை மறவாக் கேடில் செல்வந்
தொட்டே நானுய்யும் வணந் திருக்கள ரெம்பெருமானே தொடுப்பாய் நீயே

நீயேயென் னரியபிதா நின்னிடது புடைபடர்ந்த நிமலை தானே
தாயாகு முன்னரிய விருகுமரர் தமயராந் தமர்களோதா
ஞேயாது நினைநினையுந் திருவடிய ருலகமெலா முறையுந்தேயம்
பேயோடு நடமாடுந் திருக்கள ரெம்பெருமான் யான் பெற்ற பேறே. 3

பேறே நின்பதம் பெறுத லதுபெறவே யருந் தவர்கள் பெருந் தாபுற்று
ரேறேறும் பெருமானே திருக்களரெம் மிறையவனேயெழி னின்றைங்
கூறுநின் றனடியே னதுபெறவே யயலொன்றுங் குயிற்றிலேன் யா
னூறேது மில்லாமற் பதமீதலுரியகட னுனதுதானே. 4

தானேயித் தரணியினில் வித்தையெலாமற் றினுமே தடையிலாமன்
மேனோக்குமதிற் சுருதி மேன்மையதா முருத்திரிதான் மேன்மை மேன்மை
யானேறும் பெருமானே திருக்களரா யதனிலெழுத்தைந்து மெந்தாய்
மேனோக்குஞ் சிவவெனுநின் றிருநாம வீரெழுத்தே மேன்மை யாமால். 5

ஆலநிழ றனிலமர்ந்தங் கன்றொருநால் வருக்கறத்தை யருளினாய் நீ
கோலமுடன் றிருக்களரிற் றுருவாசப் பெருமுனிக்காய்க் கூத்தனாகிச்
சீலமுடன் றிருநடனந் தனைப்புரிந் தாயறிவறியாச் சிறியனேனை
யேலவுனைப் பாடிமொ பணித்திட்டாய் நின்கருணை யென்னே யென்னே 6

என்னேநின் றிருக்கருணை யிருந்தவா வேறுமிலா வெனையாட் கொண்டாய்
கொன்னேவிட் டிடவினீதி யன்றாகு நின்பதத்தைக் குழைந்துபோற்றிப்
பொன்னாருங் கிரிக்கரத்தா யுரித்தான திருக்களராய் பூன்றுவென்றே
யென்னேரமும் முனையே யான் வழுத்து மெழில்வரத்தை யெனக்கீவாயே.

வாயோநின் றனைப்புகழ வரிவிழியோ நிற்காண வயங்குங்காதோ
வோயாதுநின் புகழை யுவந்துகொள வொண்கரங்க ளொருங்குகூப்பத்
தூயாநின் றிருக்கோயில் வலஞ்சூழ வென்பதங்க டொழும்பனான
நாயேற்கு நல்குதியேற் குறையுண்டோ திருக்களரை நயந்தவாழ்வே. 8

வாழ்வேயென் னுயிர்க்குயிரே வந்தாளுந் தந்தாயே வழியிலாமற்
றாழ்வேனைத் தாழாதிங் கஞ்சலென வெனையாண்ட தயை யுள்ளானே
பாழ்வாயைத் திறந்துனது பெரும் புகழைப் பாடிமொ பணித்தே யின்பத்
தாழ்வாயென் றருள்புரிந்த வடைந்தார்க் கின்னருள்புரிவா யடைந்தேன்கண்
(டாய் 9

கண்டாயென் குறையெல்லா மோர் பொருளாய்க் கழித்தாண்டாய் கண்கள்
மூன்றே, யுண்டாக்கி யளித்தழிப்பா னுடையானே விடையானே யுமை
யாள் கூறா, விண்டாயோ வெனிலடியேன் வேறுதுணை தனிகாணேன் விம்
மி விம்மி, யெண்டோளா வெந்தாயே யென்றழுதிங் கேங்கலல்லா லென்
செய்வேனே. 10

## வேறு.

வேனலிற் பமெம்புன் கிருமியை நிகர்ப்ப வெந்துயர்க் கடலிடை விழுந்தே
யானுனை மறந்து வாடினனந்தோ யாரினுங் கடையனானந்தோ
வீனரிற் பெரிய னிழிவினி லரியனென் செய்வா னிப்பிறப் படைந்தேன்
நானிலம் புகழுங் களரியா யெனை நீ நாடிலை யெனிலென் னென்புரிவே 11

புரிவ தொன் றறியேன் புனிதனே புரங்கள் பொடிபடத் தழல்விழி யொடித்த
வரிவைதன் பாகா வடியனே னுயிரே யஞ்சலென் றருள் செயல்வேண்டும்
திரிவித தாபமற் றவர் வாழுந் திருக்கள ருறைந்த நாயகனே,
யெரிகரத் தேந்து மெந் தையே யடைந்தார்க் கெழிலருள் செய்யுகிற்பாயே

பாயதோ பூமி பழந்துணி யுடையாய் பசித்திடிற் புசித்திடல் பழமா
யாயபே ரன்பர் நின்றனைப் பணிந்தே யரும் பதம்பெற விரும்பினரா
றேயடியேனோ நாரியர்விழைவா னல்லறுசுவையை நாடினனாய்த்
தீயனாயிருந்துந் திருவடி விழைந்தேன் நீயெனைக்காக்கு நாளுளதோ 13

உளதுநின் பதமா முலகிது பொய்யா முண்மையென் றுரைத்தனர் பெரியார்
களர்நிறை யடியேன் கனவினு நினது கழலிணை கருதுறா துழன்றேன்
வளர்நிறை களரிநாயக வமுதவல்லியென் கொடிபடர் வரையே
தெளிவுற வெனை நீ யாள்வது கடனுந் தீயருக் கருள்வதே யருளால் 14

அருள்பொழி யமுத வனந்தமே தினதனுதிய வமரர்க ளெவருந்
தெருள் விழியரியொ டயன் முதலினருந் தெருவினிற் செயசெய வெனவே
யிருளற விறைஞ்ச விமகிரி பயந்த வெழிற்றிருக் குமரிய ளோடு
முருள் மலியாழி மிசைபொலி யுருக்கண் டொங்குளிரந் துவகை கூர்ந்தன
னே 15

தனந் தனை மதித்து நினைந்த மறந்து தருக்கியான் வாழ்ந்திட வறியே
னினந் தனை நினைந்து கருவம தடைந்தே யின்புற வறிகில னருநூன்
மனந்தனின் மறைந்த பெருமையை யீனையேன் மருக்கிளர் திருக்களரிறையே
தனந்தனி யிருந்து நின்பதம் பணியத் தண்ணரு டனைவிரும் பினனால் 16

ஆலமோ விழிகளரும் பெருமலையோ அரிவையர் குயங்கள்பே ரல்குல்
மூலமே துயிலும் படங்கொலோ விவற்றை மூடனே னறிகிலா தயர்ந்தேன்
சீலமே மிருந்த திருக்களர் வாழுந் தெய்வமே யென்னுயிர்த் துணையே
ஞாலமேயொளிர்க்கும் ஞானநற் சுடரே நான்மறை தேடரும் பொருளே 17

பொருணின தடியை யேத்துறும் பொருளே பொருளெனப் புங்கவரறைந்த
தெருணின தருளா லென்மனத் திருந்துந் தெரிலா ரெனத்தியங் கினனாய்
விருணனி மறைக்குமே தூவாலெந்தா யிருள்தை யொழிக்குமா றடைந்தேன்
வருணனெங்கணுஞ்சார் தருவனந் திறையே வாடினேற் கருடரல்வேண்டும்

வேண்டுமொன் றினையும் விழைவுறா வரமே விரைமலர் மறந்திடா வரமே
தூண்டறுஞ் சுடரே தோகையற் பயந்த தோகையா மமுதவல்லியின்ற
னீண்டகையான வமுதமே குமுத வரியகண் மினற் சிரம்புணர்வோய்
மாண்டவ ரெலும்பை யணிந்தருள் களரிமன்னிய மன்னான் னிதியே, 19

நிதிநிறை மாட மாளிகை யெவையு நிகரற மேருவோ டிகலும்
விதியென விணவர் நகருற வவரும் வியப்பொடு பாரிஜாதேசன்
நதிபொதிவேணி விரிந்திட வாடு நடனமே காண்புற வரவே
யதி சலபமதாம் வளநிறை களரோயடைந்தவர்க் கருள் செயு மன்னே 20

## வேறு.

அன்னை யுனையென்னென யான் றுதியாற்று கிற்பேன்
பொன்னார் மலை மாதனுவோய் புக ழென்மனத்தோ
மின்னார் திருவேணிப மேலவ பாரிஜாத
நன்னாயக நின்கழலே துணை நாயினேற்கே. 21

நாயே யனையேன்றனை நாடியு நன்மை யீவான்
பேயோ டருநாடக மாடிடும் பித்தனே யோ
கூயேயருள் செய்தனை கொண்டதை யெண்ணுகாறுந்
தாயோய் மனமின்புறு மன்பிலை சொல்லின் மாட்டே 22

மாட்டார் புரநீறெழ மாட்டிய நாட்ட முற்றோ
யாட்டே களரிப் பதியிற் செயு மாதி தேவே
கூட்டே யெனைமுத்தியிற் கூட்டிடில் யார்வெறுப்பார்
நீட்டே கரமென்றலை நன்னுற நீயெந்தாயே. 23

தாயே தனுவாதிய யானல் தள்ளிவிள்ள
நீயே யெனதின் னுரு வாயினை நீண்மனத்தே
வாயாதறி வில்லவர் போ னனிவாடி நின்றேன்
சீயே யெனநற்களர் நாயகசெப்பி யாளே 24

ஆளே யெனநின் னடிநாடிய வன்பினேனை
மாளா வகைகாத்திடன் மாதவ நீதியன்றோ
நீளார் சடை நின்மல நெற்களர் வைகுமெந் தாய்
தாளே தனை த்தாழுவர்க் கிந்திடுந் தண்மை யோனே. 25

மையார் விழி மங்கைய ராமெருங்கு தன்னிற்
செய்யாய் திருத்தேரினி னீவருஞ் செய்தி யோர்ந்தே
யையா களர் நாயக வென் மன மாங்கு வந்துன்
மெய்யார் திருமேனியை நோக்கி மிளிர்ந்த தின்றே. 26

இன்றே யென தோய்வருந் தீவினை யிற்றதாகு
நன்றே நிறை நற்களர் நாடி நடக்க வெண்ணிக்
குன்றே யுறை நாயக வென் மனங் கோணிலாம
னின்றே ருறும் வீதியிற் றீதற நிற்கு ஞான்றே. 27

தேவே திருவீரநற் சேகர தேசிகற் சேர்த்
தேவே செயுமெந்தை நின்றொழு தேத்தி நின்றேன்
கோவே பெருநற் களர் வாழ்ந்திடுங் கோதிலானே
ஆவா வெனை யாண்டிடி லென்குறையா முனக்கே. 28

உன்பாலகன் யானெனப் பன்முறை யோதினேன்யா
னென்பாலக நற்றொழில் செய்வதி லேதமென்னோ
யன்பே யிலையென்றிடி லன் பினை யைய வீதி
தென்பான் முகமாய் நடனா களர்ச் செல்லமே யோ. 29

ஓகோ வுனை யான்மறந்தே தின முய்குவேனோ
கா கா வெனை யான் சொலல் நீதி கொல்கண்கள் மூன்றோ
யேகா திருச்சீர்க் களர் வாழ்ந்திடுமெங் கணாத
வாகா விது நின் கருணைக் கெழிலாக லாமோ 30

## வேறு.

ஆமன்றென வறியே னினதரு ணின்றதுமறியே
னோ மெண்ணையு மறியேனுனை யோதும் வகை யறியேன்
காமன்றனை யெரிசேர் தருகாலா களநீலா
பாமன்றிரு க்களர்நாயக பதையாவண மருளே. 31

அருளே திருவுருவே யழகுருவே யருவுருவே
மருளே செறி யெளிநாயினை மருளாவண மருளீ
பொருளே மலிகளர் வாழிறை பொறையே நிறைதுரையே
தெருளே தருமொருவா மறைதிருவாய் நிறைவோனே. 32

நிறைவே யொருகுறைவே யற நிமலா பரிபுரணா
வறிவே திருவுருவோய் நிகாறுவோய் நிலையுறுவோய்
பொறிசேர் வுறுபுறையே நிறை யெனையா டிருக் களராய்
மறவேனுனை மறவேனுனை மறவேனுனை நிதமே. 33

நிதமே நினதடிசேர் தருநிகரே யறுதவர்நீ
ணிதமே யுற வைய்யக்கா மெழிலோடருள் புரிவான்
முதமூவிரு முகநாயகன் றனையேவிய முதல்வா
சுதை நாயகி கொழுநா களர் சுகநாயக முனியே. 34

முனிவே மிகநனி மேவுறு முனிவோர் தொழு முனிவன்
கனிவா யுனை யினிதேபணி தாவேள் களருறைவோய்
சினமோ தவமுறு மாறு செய் சிவனே யெனை யாள்வா
னுனுமாவலி யிலையோகா வொழிவே செயலறனோ 35

அறமே வுற வருளே செயு மருளு யகி தனமே
புறசி ரமுதயின் மாதவ னுனைநீ ருளா ரெனவே
யறைவா னருள் புரிவோ யமரரு நாடிட வரியோய்
திறமே வுறுகளர் மாமணிசிறியேற்கருள் புரிநீ. 36

நீதானடைந் தவர்க்கே யருள்செயு நின்மலனெனவே
தாதா பெருமொரு பேரினை த்தழுவும் புகழினனு
லேதோ வுனையருளி தியென் றிரந்தே யடைந்தனன் யா
னீதா வருணிமிடந் தனினிலை போசும் துறவே. 37

வேதம் மொரு நாலும் மதனங்கம் வியனாறு
மோதும் மிருதி புராண நியாயம் முறையோர்வு
மேதுந் திருக் களர் மேவிய விறைவா னினை மறவா
தோதும் மிதுசாதம் மெனவுள் ளாடின னருளி 38

ஈசா களிசா புரநாசா வின்மகேசா
கூசாதுணையானே பணிவேனி யருள் கூறாய்
சீச்சீயென வெனை யேசிடிற் சிறுமை வேறு
மர்சார் தலைமாலைப் பெருமகிழ் வேன்மல ருதியால் 39

மலர் மாலைகள் பொலியாடவர் மகளிர்விளையாடிக்
குலவும் பொழி னிறைகற்பக வன மேயுறை குமரா
புலையே னெனையுன தாளிணை புகழ்வா னருள் புரிவாய்
நலநாயக புலவோர்புகழ் நன்றுறை யன்னே. 40

## வேறு.

அன்னையி னினியவருள் பொழி யிறைவ வன்னையின் வயிறு மடக்காற்
றுன்னுறுந் துயரை நினைந்து நைந்தழுது துடைத்திட விரும்பு மறந்தே
னென்னை விங் குறுமோ வெனும் பயமனத்தி லிடைவிடா திருந் தெழுந்
(திட லா)
னன்னய மடைய நின்னையே களராய் நாடின னருடரல் கடனே. 41

கடனினதாகுங் காத்திட லெனைநீ காவென யான் சொலல் கவினே
விடங்கலு ளெயிற்று ப்படவா வணியும் விரைபுறை மார்பனே தருக்கா
னிடாற வுறையு மிறைவனே தருக்களியம்புமோ வீதி நீயென்று
வடைவது கண்டா யாதலி லெனைநீ யாண்டிடல் கடன் கடனே 42

கடனெறி கடவா க்கடமையே கடுப்பக் கருதருந் தவரெலாங் கடவா
திடபமே விவர்ந்த வெழிற் றிருக்களரோ யெந்தையே யிருந்துனையடைந்தார்
முடவன் கொம்பினின்றேன் முற்றுற நினைந்த முறையென நெறிசெலா
னடைதா நினையி லென்னவா மருளதாயிடி லென்னறியேனே. (வதியே

அறிவாறுஞ் சிறியன் வெறியனான் பொறியனறிவினர் தமை யணுகுகிலன்
செறியிருட் கொடியன் செடியன் யான் பொடியன் செய்கையுஞ் சிறிதறி
குகிலன், மறிகர களரி வளர்தரு மிறைவ மாசுளனென் னினுநின் சீ
ருறவழுந்து தற்கோ வுரியவனாயேயுறுதலி னொருகுறை விலனே. 44

இலன் விழை வரிவை யென்னவே நடிப்பனேன் மனத்திருந்து வாழாசை
நலன் சிறிதலவா னானறிந்திடுவன லமிகு நீயுமே யறிவாய்
புலன் வழி மறித்துத் திருத்தியே யாளப் போற்றினேன் கவர்வள ரிறையே
நிலந் திருத்துறுத லென்னவே யெனையுநீ திருத்துறுதலே யுரித்தால் 45

உரித் தெனக் குனது திருவடி பேண லுரித் துனக் கென்னையாண் டிடுதல்
கருத்துறு விடத்தைக் களத்தினிற் றரித்த களரி கற்பக வனத்திறையே
விருத்த நல்வடிவ மடைந்துயா னுன்னைவேண்டிட னலங்லோலொ முறையோ
வுருத்திர வெனையாண் மருட்டிர னழித்தே யுன்கழல்கனவினு மறவேன் 46

மறவராங் காமமாதியர் வயமாய் மருள் வனத்திருளுற வாழ்ந்தேன்
குறமகள் கொழுனன் றனைத்தருங் குமரி குலழயப் புல்லுரு திருமார்பா
பிறவியொ டிறவை நினைக்கிலோ மனமும் பீதியைப்பெரிதுறு மெந்தாய்
நறைமலரடியை நாயினேன் பணிய நாயக களரியா யருளே 47

ஏதமே மிகுந்து பாதகம் புரிந்த விரும்பெருங் கொடியரே யெனினும்
நாதனே நினது நாமமே வழுத்தினான் மறை யவரை நல்லவரா
யோதுறு மெனலைத் துணிந்து நாயடியேனாண்டிருக் களர் வள ரிறையே
கோதிலா வுனது திருப்பெயர்வழுத்தக்கொண்டனன்மனத்தினிற் றுணிபே

துணுவுறு மரிய பத்தியிற் பிரியன் றுதைகுலம் வயது சீர் நடைக
ளணவுறு கல்வி செல்வமே யழகொ டரியதோர் வீரமே யாதி
யெணுவனீ யல்லா யென்றெனை யாளு மிருந்தவர் திருந்தவே யறைந்த
துணிவினைக கேட்டுந் திருக்களர் நாத துணிந்ததை யுளுற்றுமா துணியேன்

ஏனறிந் திருந்துமிடர்க்கட லாழ லெத்தையே யெளியனே னறியே
னானக மதியோ வுணவினி னசையோ வுழைவிழி மடந்தைய ருறவோ
மீனுறை ஞான வாவியே யாதி மிளிர் தரு திருக்கள ரிறையே
நீநனி நினைந்து கருணையே புரிந்து நீசனை யாளுதி யாசே 50

## வேறு.

சேனை விஞ்சுறுமா ரதன் றிருச்சுதர் வேண்டி
யானினைந்தனை யாடிட வாட்டியே யன்யாற்
கோனுமமந்தர்க ளிருவரைப் பெற வருள்கொடுத்
தானிலம்புக டிருக்களர் நாதனே மோற்றி. 51

போற்றி யென்றுனைப் போற்றிடப் பிரமதாண் டவத்தை
நாற்றிசை புகழ் நன்முனி யமரர்கண் காண
வாற்றி நின்றதிங் கருந் திருக்களருறை யமுதே
யேற்றுகந்தவா வென்மனந் தனைவிடுத் தேகா. 52

ஏகனாகியே யிருந்தனை முனம் பினமெழிலா
ராகமூன்றினை யம்பிகை யுறவினா லடைந்தாய்
சோக மேவிய வெனக்கரு டிருக்களர்ச் சுடரே
மாக நாடரும் வழுத்துறு மாசிலா மணியே. 53

மணியின் வாசகப் பெருந்தகை மாவுணர் வுறவே
யணிசெய் நீடரு வணைந்தென வருந் தருவனத்தே
பிணையறத் திருவருளினா லென்றனை யாள்வான்
குணகண மணி க்குன்றமே நின்றனை குறிதோ 54

தோடமின்றிய நின்றிருமேனியிற் றுகள்போ
லாடு நீனிற மைய மெய்த் திருக்கள ரரசே
பீடுறும் மென ப்பேசுவர் பெரியவ ருலகன்
பீடை யற்றிடப் புரிதலின் பெருமனத் துறவே. 55

உறவு நின்றிருப் பதந்தனி லுறிலறிற் பலந்தா
னறவிருந்தது மறைந்தது மடியனே னறிந்தே
னிறைவனாந் தசமுகன் முனம் பினமுற லெண்ணியான்
பிறவியற் றவர் வளர்திருக் களருறை பெரியோய் 56

பெரியை நீயறச் சிறியைநீ பித்தனையாள
வுரியை நீ யுலகேதுவு நீயுனை யலதோ
ரிரிதி ருணமு மிலையென மறையெலா மியம்புங்
கரியவன் றொழுங் களர்வள ரிறைவனே கரியே. 57

கரியெனாந் திருப் பெரியவ கருணையா னீயே
யிரவி யிந்துவும் புருடனா மெறி வளி வான
மெரியறற் புவியாகியு மெழில் கொண் மூர்த்தியுமா
யொருவனே திருக்கள ருறை யும்பனே யுறைவாய் 58

ஆயனார் தரும் பெண்மணி மணக்கு மாரியனே
சீயெனா வெனைச் சீறிட னீதியோ சிறியே
னீயலா தொரு துணையினை நிமலனே காணேன்
மாயவன்றிரு மைத்துனா திருக்களர் வாழ்வே. 59

வாழ்விது பெருமாய மன்னுவது தினமா
லாழ்வதென் கொலோ விடயமீ தாசையா லெனவே
தாழ்வ தின்றிய திருக்களர்ச் சம்பு வின்றேழன்
சூழ்வ தோர் மொழி சூழ்ந்தனன் மன்ந்தனிற் றினமே. 60

## வேறு.

இனதன் பணியுந் திருநற் களராய்
தனதன் றிருத்தோழ னெனுந் தனியோ
யனைதந் தையிலா தவ வன்புடையார்க்
குனதின்பதி யீபவ வொண் சுடரே. 61

சுடரே சுடரென் வகைக்குஞ் சுடரோ
யிடரே தெனக் கின் புறுநின் பதமே
படர்வேன் பழநற் களர்ப் பண்ணவனே
விடமேவுறுவொண் களமே லவனே 62

மேலோய் புனல் சூழ்தரு மீனமுளோய்
நாலோய் களர் நாயக நாட்டியத்தோய்
சேலோய் கணி சீரமுதக் கொடியோய்
வேலோற் பெறு சூலமுளோய் விரகோய். 63

ஓயா துழனு யெனை யோ யெனவே
நீயோதிடில் வாய்துயர் நேருறுமோ
பேயோடுழல் பித்தபிறைத் தலையோய்
மாயோகி கண் மன்னு களர் வளமே. 64

வளமே தரமானவூர் வானவர்கள்
களர் வாழ்ந்திடு கற்பக நாயகனே
யுளமேவுறு மாசையினு லுறுவார்
களனே பிறவிப் பிணி காதுறவே. 65

வேதாகம நீதியையே யவர்கள்
பாதாரவிந் தம் பணிபான்மையர் தம்
பாதாரவிந்தம் பணியப் பணிப்பாய்
நாதா களர் வாழ்ந்திடு நாயகனே. 66

தன்னேர் மணநாயினை யே களரா
யின்னுடிட வின்னருள் செய்தனை நீ
மன்னு வமை நாயக மாசிலனே
பொன்னார் திருமேனிய போதகனே. 67

போதந் தரும் புண்ணிய நற்களரா
யேதந் தமுமா தியு மின் னினக்கே
வேதந்தரும் வேதியநீதியனே
காதந்த ரிலென்னுதி காவிடுமோ. 68

இடுமோவினை யென்னையுமே யினிமேல்
வடுமாங் கனிபங்க வளர்பிறையாய்
நடுநாயக நற்களர் நாயகனே
திடமாயுன சேவடி சேர்ந்தனனே. 69

சேரும் பொழுதே சுகத்தீ விடய
மாரும் படியா முன மாடியெனு
வோரும் படிநின் றிலை யொண்களராய்
கூடும்படி நீயினிக் கூட்டுதியே. 70

## வேறு

கூட்டி யென்றனை நின்றிருக் குழுக்கனே குலவி வாழ்ந்திட வேண்டி
நாட்டி யென்றனை நல்லருள் சுரந்தனை நம்பனே மறப்பேனோ
வா[illegible] விழி மங்கைய ரமரர் தமங்கைய ரவரோடுங்
[illegible]மற் றுலவிலம பொலி திருக்களர்த் தெய்வநாயகனேயோ 71

ஓமெனுந் திருமந்திர வில்க்கிய வொளிவிடு சுடரேயோ
நீமனுந் திருக்களர் நகர் சேர்வுற நெஞ்சிலே நினைந்தாலும்
பூமனுந் திருக்கற்பக நிழலொளிர் புரந்தரன் புவிமேவி
யாமனுஞ் சுக மென்றிடி னின்னக ருறைவதை யறைவேனோ 72

நோயிலாத நல்வாழ்வு நற்றனமணி நுண்ணிய மதியார்ந்த
சேயு நன்மனை முதலிய யாவுமே சேவடி பணிவார்க்கு
[illegible]யளிக்தருந் திருக்கள ரிறைவனே நீத்தபிணிக் னிக்காயம்
போயிருந்திடக் கயிலையு மளித்திடும் புகழினைப் புகழ்வேனே. 73

புக ழினோ டிக ழின்பமுந் துன்பமும் பொருந்திடி லெளியேற்கே
மிக வும் வாடுவன் வாடிடா [illegible]த மிலையவே யருள் வாயால்
திகழும் வேதமதோதிடு மோதமு க்தெருவினி னடங்கான
மகிழு மோதமும் வானவர் நகர்புகும் வளமலி களரோனே. 74

களரி பாரிஜாத வனமந்தாரமே கற்பக வனஞ் சேரார்
களரென் றுமமதேயந் தவிர்நகர் பெருங் காடெனப் பழுதாக
விளங்கிலா வணி நாயக நுறவிகட் கிறைவனும் வீரேச
னுளமதே புகுந் தீர்த்திவண் கயிலையே யுறயிதுப் புரிந்தாயே. 75

ஏதமிக் குறத்தாய் கருவிருந்து யானிருங் கிருமிகள் வாட்டப்
போத மங்கியே வங்கியாற் றகிப்புறப் புன்மல நிலைற நீரி
லாதுறைத் துனைமறந்தனனெய்கோவருங் களர் நகர் வாழ்வே
நீதெரிந் திலையோ கருணாகர நின்மல நிறைவோனே 76

நேம மின்றிய குழவியின் மலகுழ னிறைவ புவினை மேவி
யாம மிஞ்சியே யுறவழ வுறமிக வழுதழு துழன்றேயுண்
ணும நெஞ்சினி னினைகிலன் றிருக்களர் சார்ந்தவர்க் கருடேவே
சேம மிவ்வெளி நாயுறவரு டனைத் திருக்கணுற் புரிவாயோ. 77

வாய்ந்திடிற் றிருக்குமரமோ வனை பிதா வருத்துறு குருவாலே
மேய்த்துறத் துயர் யாவினு நசை மிக மெலிந்து வாடலி னாலே
காய்த்து நின்றனை நினைகிலா திருந்தனன் களர்வள ரிறையோனே
பேய்த்தனந் தனை நீக்கி யென்றனக் கருள் பேயோடா டெம்மானே 78

மானினோக்கியர் வலைப் படுபெருவினின் மயங்கி யைம்புல னாலே
யூனழகினை மிகமதித் துண்ணவே யுறு பொருண் மிகத் தேடி
யானினைத்துனை மறந்தனன் பறந்தனன் யாது செய்திடு வேனோ
தேனுலாங் களர் மேவிய நடம்புரி தேவர்க டேவேயோ. 79

ஒவயோதிக முற்றிடி னடைதளர்ந்துதிர்ந்தெ யிறுகள் யாவு
மேவுநல்விழி பஞ்சடைந் தாசையான் மெலிவினை மிகமேவி
சாவுறும் பயந்தனை நினைந் தந்தவோ தருவனந் தனில் வாழுந்
தேவ நின்றனை மறந்துறுந் துயர்தனைத் தீர்த்தெனக் கருள்வாயே 80

## வேறு

வாயிற் றுதிபல புரியே னுனை நினை வளமே வொருசிறி தறியே னான்
காயப் பணிகளு மிலனாய் மலனிறை காயத் தகமதி யுளனானேன்
நீயிப் படிவிட லெழிலோ களருறை நிமலா குணகண வமரேசா
தோயக் கயலுகள் வானத் துடுவொடு தோலத் திரிதரு நகரோனே 81

நகரோ டணி கரி பரியே முதலன நலமார் தனமனை யுறலாலெ
னிகமே யலதொரு சிறிதோ ப்ரமுற விவை யாவையு மினதருளா லென்
றகுமா வுறவொடு முனையே நினைதரி லுயர்மா களரியி லுறைவோனே
சுகமே யுறவெளி தெனவே யெனையவ தொடார வண்மருள்டோவாயே

ஆயுள்ளாகர் நிச மழிவே யுறுமுடை யருமா கடமுறு மறலேயோ
லேயும் மனைதன நீளும் மலையென வேகும் முயிருறன் மினலையாம்
பாயும் முளைமுழ வாதே களர் வளர் பாலா வுனை நினைவேனோயா
னீயுன் னருளிலை யெனினோ நீசரி னீசன் செயலது வறியேனே. 83

அறியாமையினொடு கரமாவிழிபத மறைவாய் சிரவண முளமோடே
செறிமா சுகளெவை யுறுமாயினு மொரு சிறிதே திருவுள மருவாமே
மறவா துணை நினை வரமேதரு திகன்மலரே நிறை தரு வன நாதா
பிறவா ரவர் தொழு துறவா யுறுநிறை பெரியோய் மறை பெற வரியோயே

அரியோ டயனுமை சரிமாமுக னறு வருமாமுக னிரவி யராதி
யொருசீ யயிர்களை யருணீ யுனையல துளதோ வுலகமுழ மொளியோனே
விரியி தறிகிலர் மயலா யுழலுவர் விரைசேர் களரியி லுறைவோனே
திருவே செறி தருதிருநா ளுறநிறை தெருவோய் தருவன முறுதேவே 85

தேவே மணமறு காவே வருமொரு மூவோர் தொழுமணி தேரோனே
பாவே தருபவர் சாவே யற வருள் பாலீ வெளிய கபாலீயோ
நீவே றெனவேனை நாடேனினை நினை நீளோர் குழுவினி னேர்வேனோ
ஞுவா வெனை யெளிதேதோ புரிகுவ னுமாதிரிகரு களரோனே 86

களரோ வளர்தரு வளனே தெளிவுறு கருணை யருணிறை கடலோனே
மௌ நாயகி பணி கழலா யழலுறு மினுமா கரமழு மனுவோனே
யுளமே தீயவன் களமே மேயவனுழை நாரியர்தன முறுநாயேன்
றளவே யுரியவ னெனவே யாயினுஞ் சரணே மருவின னருளீயே. 87

ஈயோடாயினு வுவமானமுமில வெளியே னளிகொளு முனைநாடித்
நீயே னெனையருள் களரா யெனவுரை தெருவே திரிவொடு தருவேனோ
பேயாயி னுமொரு தருமீதொருகணம் பேணு மெனதுள மதினோனுந்
தாயோய் தருவன நீயே யருள்கொடு துகளோ னெனவெனை நினையாதே.

யாதே யறியினு மறிவோ ரணுவதும் யானே துவுமில மெனவேயா
னேதோ பெரிதறி சாதாமென வெனை யானே யெணிமன திறுமாந்தேன்
றூதே யறவரு ளுதா களர்வளர் தேவா வுமை யுறு பாகாவோ
தாதா வெனதக மோதா கறவரு டாளோ னெனவெனை நினையாயோ. 89

நினையா தெனதுள முனையே நினைதரு நெறியே சிறியனு முறவே யே
கனிவா யுருகிமெய் வியர்வே புறவருள் கணமேயரு ளெனை யுடையோனே
கனமே மனுபணி கணமேய் வணமுறு களரே வளர் தரு பெருமானே
யுனையே யலதொரு துணைவேறிலை யிலையொருவா பெரியவ ருற்வேயோ

## வேறு

உறவர்க ளுறவே போற்றி யும்பர்கள்பணிவோய் போற்றி
மறவர்கண் மறைவே போற்றி வளமள களரோய் போற்றி
துறவிக ளுறவே போற்றி துகளறு சுடரே போற்றி
யிறவரும் வரமே யீயு மெந்தையே போற்றி போற்றி. 91

போற்றி யென்னுயிரே போற்றி புண்ணியர்க் கருள்வோய் போற்றி
நாற்றிசை புகள்வோய் போற்றி நாடுதற் கரியோய் போற்றி
தூற்றினு மருளே யீயுஞ் சொல்லொணாக் கருணாய் போற்றி
காற்றுள மிழப்போர் போற்றுங் களரிஞர்ப் போற்றுவாமே. 92

வாமமா ரமுதவல்லி வளமுறு மிறைவா போற்றி
சேமமார் வலம்புரீசச் செல்வனை யீன்றாய் போற்றி
ஓமுளைந் தெழுத்தை யோது மொருவனைப் பயந்தாய் போற்றி
சேமமார் வீரஞான சேகரன் பணிவாய் போற்றி. 93

போற்றியே மாலாதார கன்றனுக் கருள்வோய் போற்றி
போற்றிநீ டிருவிழாக்கள் மல்கிய களரோய் போற்றி
போற்றிநீ றணிந்த தூயோர்க் கருள் செயும் புகழோய் போற்றி
போற்றி தே ரேறியாடும் பூமனே போற்றி யெந்தாய். 94

எந்தையே போற்றி யிந்த வுயிர்க்கெலா மிறைவ போற்றி
யிந்துவே யணிந்து கங்கை யணிசடை யிறைவ போற்றி
சிந்தை நைந்துருகு நாயேன் சிரமிசைப் பதந்தாய் போற்றி
சந்தநற் கவிகள் வேண்டுஞ் சம்புவே போற்றி நம்பா. 95

நம்பனே போற்றி யெங்க ணாயக போற்றி வானோ
ரெம்பிதா வெனவே போற்று மெந்தையே போற்றி போற்றி
கம்பமற் றுயிர்கள் வாழுங் களர்வள ரிறைவ போற்றி
துன்பமே தணிப்பாய் போற்றி தூயவ போற்றி யன்னே. 96

அன்னையே போற்றி போற்றி யடைந்தவர்க் கருள்வாய் போற்றி
பின்னையும் பணியு மன்னை பின்னுறத் தேரிலேறி
மன்னியே துரிதமாக வலம்வரு யிறைவ போற்றி
கன்னலினி[illegible]ரியாய் போற்றி களர்வள ரிறைவே போற்றி 97